முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்

நாள்: 13.07.2026 அ.வ.எண்.170/2022 பி.வா.சா.1 – மோகன்ராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :–**

1. நான் படிக்கவில்லை. வாதி கண்ணன் எனக்கு 23 வருடங்களாக பழக்கம். நான் வெள்ளி வேலை செய்து வருகிறேன். வாதி Professor ஆக பணிபுரிந்து வருகிறார். எனக்கும், வாதிக்கும் முதன் முதலாக கொடுக்கல், வாங்கல் எந்த வருடம் நடந்தது என்றால் 2021 ஆகும். அதற்கு முன்பு எங்கள் இருவருக்குமிடையே கொடுக்கல், வாங்கல் இல்லை. நானும், வாதியும் இருவரும் சேர்ந்து இடம் வாங்க ஒப்பந்தம் ஏதாவது ஏற்படுத்தினோமா என்றால் இல்லை. நான் மட்டும் தான் இடம் வாங்கினேன்.

2. எனக்கு எந்தெந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் இந்தியன் வங்கி, ஸ்டேட் பேங்க் ஆகும். வெள்ளி வேலையை தவிர வேறு வேலை ஏதேனும் நான் செய்யவில்லை என்றால் விசைத்தறி செய்து வருகிறேன். அது என் மனைவி பெயரில் உள்ளது. எனக்கு சொந்தமாக வீடு மனை உள்ளதா என்றால் உள்ளது. வீடு நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினேனா என்றால் வாங்கி இருக்கிறேன். 2020ல் வாங்கினேன். எவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்றால் 40 இலட்சம் ரூபாய். எனது பெயரில் 12 இலட்சம் ரூபாயும், எனது மனைவி பெயரில் 25 இலட்சம் ரூபாய் வாங்கினேன். கடன் வாங்கும் போது என்ன ஆவணங்களை வங்கியில் கொடுத்தேன் என்றால் சொத்து பத்திரங்களை கொடுத்தேன்.

3. தொழிலுக்காக கடன் வாங்கினேன். எனது மனைவிக்கு 60 பைசாவும், எனக்கு 1.00 வட்டி ஆகும். எந்த தொழிலுக்கு கடன் வாங்கினேன் என்றால் வெள்ளித்தொழிலுக்கு. 2024ல் கடனை கட்டி முடித்தேன். நான் வருமான வரி செலுத்தி வந்தேன் என்றால் செலுத்தி வந்தேன். 2020 முதல் 2024 வரை உள்ள வருடங்களுக்கு வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

2020 முதல் 2022 வரை கொரோனா காலம் என்றும் அந்த காலகட்டத்தில் தொழில் சரியாக இல்லை என்றால் சரிதான்.

4. லாபத்திலுள்ள பணத்தை வைத்தும் கொஞ்சம் வெள்ளியை வைத்தும் கடனை கட்டி வந்தேன். வாதி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 2021 ல் 1 வது மாதம் கடன் கேட்டிருந்தார். நான் 2 ம் மாதம் கொடுத்தேன். 5-2-2021 ல் கொடுத்தேன். வாதியும், நானும் ஒரே ஊர் தான். அதனால் நான் ஊரடங்கு உத்தரவு போட்டதால் வீட்டை விட்டு வெளியே வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மூன்று மாதம் மட்டுமே வெளியே வராமல் இருந்தேன்.

5. வாதி என்ன காரணத்திற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் குடும்பத்திற்காக, அவசர தேவைத்திற்காகவும் கடனாக பணம் கேட்டார். அவசர காரணத்தை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். பணத்தை தயார் செய்வதாக சொல்லி 1 மாதம் கழித்து பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். எப்படி பணம் ரூ.30 இலட்சத்தை தயார் செய்தேன் என்றால் லோனை கட்டுவதற்காக வெள்ளியெல்லாம் விற்று பணத்தை தயாராக வைத்திருந்தேன். அப்போது வாதி 1 வருடத்தில் தான் திரும்ப பணத்தை கொடுத்துவிடுவதாக சொன்னார். முப்பது இலட்சம் ரூபாயை வங்கியிலிருந்து எடுத்து நான் வாதியிடமிருந்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வங்கியிலிருந்து ஒரு ரூபாய் கூட எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஐம்பதாயிரம் ரூபாய் எடுத்திருப்பேன்.

6. 10-11-2012 ல் வாதி என்னிடம் ரூ.3,00,000/- கடன் வாங்கினார் என்றும் அதற்காக இருபது முத்திரைத்தாள் இரண்டில், கடனுறுதிச் சீட்டுகள் இரண்டும் சேலம் ஆக்சிஸ் வங்கி குகை கிளையில் காசோலை எண்கள்.029931, 029932, 029935 மற்றும் 029936, மற்றும் பச்சை தாள்கள், வெள்ளைத் தாள்கள் நான்கும் இவை அனைத்திலும் பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 2017 ம் ஆண்டிலேயே என் பெயரில் வாதியின் மனைவி புகார் கொடுத்து

சி.எஸ்.ஆர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது என்ன புகார் என்றால் எனக்கு தெரியவில்லை.

7. 16-08-2021ம் ஆண்டு என் பெயரில் கண்ணனின் சகோதரி ஜெயா புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வாதியின் சகோதரி அவர் கொடுத்த புகாரில் பிரதிவாதிக்கும், வாதிக்குமிடையேயுள்ள கடன் பிரச்சனை முடிந்துவிட்டது என்றும் தற்போது தட பிரச்சனை சம்மந்தமாக கெட்ட வார்த்தையால் திட்டி காலில் கடப்பாரையால் குத்தி விட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. அப்படி ஒரு செயலும் நான் செய்யவில்லை.

8. அப்போது இரும்பாலை காவல்நிலையத்தில் குபேந்திரன் என்பவரும், மலர்விழி ஆகியோர் காவல் அதிகாரியாக இருந்தார்கள் என்றால் என்னை கூப்பிட்டார்கள் நான் போனேன். ஜெயா கொடுத்த புகாரில் என்னை கூப்பிட்டார்கள், நான் போனேன். அங்கு போய் நான் என்ன சொன்னேன் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னேன். ஜெயா அரசு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. காவல்நிலையத்தில் எனக்கு வாதி பணம் தரவேண்டியுள்ளது என்று நான் சொன்னேனா என்றால் அது பற்றி சொல்லவில்லை. வாதி பணத்தை திருப்பி தரவில்லை என்ற விவரத்தையும் சொல்லவில்லை. 2017 ல் வாதியின் மனைவி என் மீது புகார் கொடுத்த பிறகு வாதிக்கு முப்பது இலட்சம் ரூபாய் பணம் கொடுத்தாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. முப்பது இலட்சம் ரூபாய் கடனாக கொடுக்க என்னிடம் போதிய வசதி வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அதை நிரூபிக்கும் கடமை என்னுடையது என்றால் நான் நிரூபிக்க தயார். வாதி எனக்கு பணம் தரவேண்டியது விசயமாக நான் காவல்நிலையத்தில் புகாரே கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

9. வாதி எனக்கு ரூ.17,50,000/- பணம் தருவதாக சொல்லி ஏதேனும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் வைத்து வாதி

எழுதிக் கொடுத்தாரா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. இவ்வழக்கின் 3, 4 பிரதிவாதிகளை எங்களுக்கு சாதகமாக செயல்பட வைத்து வாதியிடமிருந்து ரூ.17,50,000/- தர வேண்டுமென்று ஒரு கடிதத்தை மிரட்டி காவல்நிலையத்தில் பெற்றேன் என்றால் சரியல்ல.

10. 15-03-2022 மாலை 5.51 மணிக்கு அவருடைய கைபேசியான 6380337471 என்ற எண்ணிலிருந்து வாதியை அழைத்து ரூ.17,50,000/- யை உடனடியாக செட்டில்செய்யவேண்டுமென்று வாதியை போலீசார் மிரட்டிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. 3, 4 பிரதிவாதிகள் எனக்கு சாதகமாக வேலை செய்ததால் அவர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி எங்கள் ஊர் பஞ்சாயத்தாரர் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் காவல்நிலையத்திற்கு அடிக்கடி சென்றுவருவார் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது.

12. நான் , 2ம் பிரதிவாதியை பயன்படுத்தி அதன் மூலம் 3, 4 பிரதிவாதிகள் அதிகார துஷ்பிரயோகம் செய்து மிரட்டி ரூ.17,50,000/- பணம் தருவதாக சொல்லி மிரட்டி எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கிலுள்ள அழைப்பாணையை பெற்று கொண்டு தான் தன் கையில் வைத்திருந்த பூர்த்தி செய்யப்படாத காசோலைகளில் ஒரு காசோலையை முப்பது இலட்சம் என மோசடியாக பூர்த்தி செய்து வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி 2ம் மாதம் கழித்து பணத்தை வசூல் செய்வதற்காக போட சொன்னார். நான் அவரிடம் போடலாமா என்று கேட்டதற்கு 2 மாதம் கழித்து போடுங்கள், என்னிடம் பணம் இல்லை என்று சொன்னார். போடுவதற்கு முன்பு அவரிடம் சொல்லி தான் போட்டேன். 2 மாதம் கழித்து வங்கியில் வங்கி கணக்கில் பணம் உள்ளது போலி என்று சொன்னதால் போட்டேன்.

13. இந்த வழக்கினை 24-03-2022ல் தாக்கல் செய்தார் என்றால் நோட்டீஸ் உள்ளது. வீட்டில் இருக்கிறது. 3-4-2022ல் இந்த வழக்கிலுள்ள அழைப்பாணையை நான் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி 4 காசோலை மற்றும் இதர ஆவணங்களை திருப்பி தர சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்த நிலையில் இந்த வழக்கில் சம்மனை பெற்றுக்கொண்ட பிறகு இந்த வழக்கில் உள்ள காசோலையை பூர்த்தி செய்து வங்கியில் தாக்கல் செய்தது என்னுடைய மோசடியான எண்ணம் புலனாகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு உள்ள கடன் பிரச்சனை தீர்த்துவிட்டதால் வாதி எனக்கு பணம் தரவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கிலுள்ள ஆவணங்களை திருப்பித் தர நான் கடமைப்பட்டவர் என்றும் கட்டுப்பட்டவர் என்றம் சொன்னால் சரியல்ல. வாதிக்கு கிடைக்ககூடிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. (பிராதில் சொல்லப்படாத சில சங்கதிகளை வாதி தரப்பில் கேட்டுள்ளதால் அதற்கு மட்டும் ஆட்சேபனை செய்யப்படுகிறது).